**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SC.110/2023**

நாள்.09.02.2026

**M.P.No.04/2025 மனு உத்தரவின் பேரில் அ.சா.4 மீண்டும் அழைத்து 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எனது சொந்த ஊர் கீழையூர். கண்ணன்மேட்டிற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு துாரம் இருக்கம் என்றால் சுமார் 15கி.மீ இருக்கும். மாதவராமன் சென்னை உயர்நீதிமனற்த்தில் வழக்கு போட்டப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மாதவராமன் வழக்கு போட்டதனால் கண்ணன்மேடு பகுதியில் உள்ள நீர்நிலைப்பகுதியில் உள்ள சுமார் 150 வீடுகள் காலி செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். மாதவராமன் வழக்கு போட்டதால் கண்ணன்மேட்டு பகுதியில் உள்ள் 150 குடும்பங்கள் அவரது மீது கோவமாக உள்ளார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. இன்று மாதவராமன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். இன்று மாதவராமன் சொல்லிதான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேனா என்றால் இல்லை. நாராயணசாமி தொலைபேசியில் சொல்லிதான் வந்தேன். எனது அம்மாவின் பெயர் சரஸ்வதி. மாதவராமன் அப்பாவும் எனது அம்மாவும் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் என்றால் சரிதான். எனக்கு மாதவராமனுடன் பேச்சு வார்த்தை கிடையாது. என்னை போலீசார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் கண்ணன் மேட்டு அருகில் உள்ள மதில்கட்டை அருகில் வைத்து விசாரித்தார்கள். என்ன தேதி, எத்தனை மணிக்கு என்னை போலீசார்

விசாரித்தார்கள் என்றால் 27.10.2022–ல் மாலை 6.30 மணிக்கு விசாரித்தார்கள். சம்பவ நாளில் மழைக்காலம் என்றால் சரிதான். ஆனால் அன்றைய தினம் மழை பேய வில்லை. சம்பவ நாளில் மழைக்காலம் என்பதால் முன்கூட்டியே இருட்டாகும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சண்டையை நான் தடுத்தேனா என்றால் தடுக்க சென்றேன் என்னை அடிக்க வந்தார்கள் அதனால் தடுக்கவில்லை. மேற்படி விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். சண்டை நடந்து முடிந்தப் பிறகு தான் மாதவராமன் மனைவி சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும், அ.சா.1 எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதராவா பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் போலிஸ் விசாரணையின் போதும், நீதிமன்ற முதல் விசாரணையின் போதும், குறுக்கு விசாரணையின் போதும் மாறிமாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.